செ.வெ.எண்.54 நாள்: 22.03.2020

**தூத்துக்குடி மாவட்டம் அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனையில், கொரானோ வைரஸ் தடுப்பு மற்றும் முன்னெச்சரிக்கை பணிகளில் ஈடுபடும் மருத்துவர்கள், செவிலியர்கள், காவல்துறையினர் மற்றும் தூய்மை பணியாளர்களை பாராட்டி கை தட்டி நன்றி தெரிவிக்கும் நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி, இ.ஆ.ப., அவர்கள் பங்கேற்று கைகளை தட்டி நன்றிகளை தெரிவித்தார்.**

---

தூத்துக்குடி மாவட்டம் அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனையில், கொரானோ வைரஸ் தடுப்பு மற்றும் முன்னெச்சரிக்கை பணிகளில் ஈடுபடும் மருத்துவர்கள், செவிலியர்கள், காவல்துறையினர் மற்றும் தூய்மை பணியாளர்களை பாராட்டி கை தட்டி நன்றி தெரிவிக்கும் நிகழ்ச்சி இன்று (22.03.2020) நடைபெற்றது. நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி, இ.ஆ.ப., அவர்கள் பங்கேற்று கைகளை தட்டி கொரானோ வைரஸ் தடுப்பு மற்றும் முன்னெச்சரிக்கை பணிகளில் ஈடுபடும் மருத்துவர்கள், செவிலியர்கள், பாதுகாப்பு பணியில் ஈடுபடும் காவல்துறையினர் மற்றும் துப்புரவு பணியாளர்களுக்கு நன்றிகளை தெரிவித்தார்.

பின்னர் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:

மாண்புமிகு பாரத பிரதமர் அவர்களின் வேண்டுகோளின்படி, தூத்துக்குடி மாவட்டத்தில் மக்களின் ஊரடங்கையொட்டி காலை 7 மணிக்கு அனைத்து கடைகளும் அடைக்கப்பட்டுள்ளது. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் மக்கள் ஊரடங்கு நாளை காலை 5 மணி வரை நீட்டித்துள்ளார். நமது மாவட்டத்தில் பொதுமக்கள் ஊரடங்கிற்கு நல்ல ஒத்துழைப்பு அளித்தார்கள். அனைத்து கடைகளும் அடைக்கப்பட்டுள்ளது. பொதுமக்கள் அனைவரும் அவர்கள் வீட்டில் உள்ளனர். பொதுமக்கள் அனைவரும் சரியாக மாலை 5 மணிக்கு வெளியே வந்து கொரானோ வைரஸ் தடுப்பு மற்றும் முன்னெச்சரிக்கை பணிகளில் ஈடுபடும் சுகாதார துறையினர் உள்ளிட்ட அனைத்து துறை அலுவலர்களுக்கும், பணியாளர்களுக்கும் கைகளை தட்டி நன்றி தெரிவிக்கப்பட்டது.

இன்று கடைபிடிக்கப்படும் ஊரடங்கை அடுத்த 15 நாட்களுக்கும் தொடர்ந்து கடைபிடிக்க வேண்டும். சமுதாய இடைவெளியாக இருப்பதோடு தங்களையும் சுத்தமாக வைத்துக்கொள்ள வேண்டும். பொதுமக்கள் சமுதாய இடைவெளியுடன் இருப்பதுடன் காய்ச்சல் அறிகுறிகள் ஏற்படின் அருகில் உள்ள மருத்துவமனைக்கு சென்று சரியான சிகிச்சை பெற வேண்டும். தூத்துக்குடி மாவட்ட பொதுமக்கள் கொரானோ வைரஸ் தடுப்பு மற்றும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளுக்கு தொடர்ந்து ஒத்துழைப்பு தர வேண்டும் என தெரிவித்தார்.

நிகழ்ச்சியில் தூத்துக்குடி அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனை முதல்வர் மரு.திருவாசகமணி, உறைவிட மருத்துவர் மரு.சைலேஷ் ஜெபமணி, தூத்துக்குடி துணை இயக்குநர் (சுகாதார பணிகள்) மரு.கிருஷ்ணலீலா மற்றும் மருத்துவர்கள், செவிலியர்கள், அலுவலர்கள், தூய்மை பணியாளர்கள் கலந்துகொண்டனர்.

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், தூத்துக்குடி.